# Tnpsc Model Question Paper 27 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. -------- மனித இனங்களின் அருங்காட்சியம்" என அழைக்கப்படுகிறது
(அ) இங்கிலாந்து **(ஆ) இந்தியா** (இ) அமெரிக்கா (ஈ) சீனா

2. பொருந்தாததை தேர்ந்தெடுக்கவும்:
(அ) பாதாமி சாளுக்கியர்கள் (ஆ) வெங்கிச் சாளுக்கியர்கள்
**(இ) நந்திச் சாளுக்கியர்கள்** (ஈ) கல்யாணி சாளுக்கியர்கள்

3. பொருந்தாததை தேர்ந்தெடுக்கவும்:
(அ) சிந்து சமவெளி மக்கள் இரும்பு மற்றும் குதிரையை அறிந்திருக்கவில்லை
(ஆ) சிந்து சமவெளி மக்கள் ஆபரணம் செய்ய சிவப்பு நிற மணிக்கற்களைப் பயன்படுத்தினர்.
**(இ) பொதுவாகப் பட்டு ஆடைகளே சிந்து சமவெளி கலாச்சாரத்தில் பயன்பாட்டில் இருந்தன**
(ஈ) சிந்து சமவெளி ஆண், பெண் இருபாலரும் ஆபரணங்களை விரும்பி அணிந்திருந்தனர்

4. "விழு!, மூடிக்கொள்! பிடித்துக்கொள்" என்பது எதற்கான ஒத்திகை?
(அ) தீ (ஆ) சுனாமி **(இ) நிலநடுக்கம்** (ஈ) கலவரம்

5. கீழக்கண்டவற்றுள் எது பணப்பயிர் அல்ல?
(அ) கரும்பு **(ஆ) காபி** (இ) புகையிலை (ஈ) பருத்தி

6. தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு எது?
(அ) மகாநதி **(ஆ) கோதாவரி** (இ) கிருஷ்ணா (ஈ) நர்மதா

7. தமிழ்நாட்டில் உள்ள பன்னாட்டு விமான நிலையங்கள் ---------- ஆகும்
**(அ) 4** (ஆ) 3 (இ) 2 (ஈ) 1

8. தமிழ்நாட்டில் "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48" திட்டத்தின் நோக்கம்
(அ) புற்றுநோய் மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்
**(ஆ) சாலை விபத்தின் மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்**
(இ) கொரோனா மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்
(ஈ) ஊட்டச் சத்து குறைபாடு மூலம் ஏற்படும் இறப்பைக் குறைத்தல்

9. சமூகநீதி எனும் கருத்துருவானது ------------ல் உருவானது
(அ) 16–ம் நூற்றாண்டு (ஆ) 18–ம் நூற்றாண்டு
**(இ) 19–ம் நூற்றாண்டு** (ஈ) 21–ம் நூற்றாண்டு

10. நீதியை நியாயம் என்று கூறியவர் யார்?
(அ) சாமுவேல் ப்ரிமேன் (ஆ) தாமஸ் மெர்ட்டன்
(இ) ராபர்ட்.கே.மெர்ட்டன் **(ஈ) ஜான் ராவல்ஸ்**

11. 1932ஆம் ஆண்டு ஜனவரி 26–ஆம் நாளில் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றியவர் -------- ஆவார்.
(அ) திருப்பூர் குமரன் **(ஆ) ஆரியா (பாஷ்யம்)** (இ) T.பிரகாசம் (ஈ) K.நாகேஸ்வர ராவ்

12. ------------ பிரம்ம ஞானக் கருத்துக்களை தன்னுடைய "நியூ இந்தியா" மற்றும் "காமன்வீல்" செய்தித்தாள்களின் மூலம் பரப்பினார்.
**(அ) அன்னிபெசன்ட்** (ஆ) சாவித்திரிபாய் (இ) அய்யன்காளி (ஈ) சர் சையது அகமத் கான்

13. "மனோன்மணியம்" என்னும் நாடக நூலை இயற்றியவர் ------ ஆவார்
(அ) மீனாட்சி சுந்தரனார் **(ஆ) பி.சுந்தரனார்** (இ) உ.வே.சாமிநாதர் (ஈ) சி.வை.தாமோதரனார்

14. தமிழ்நாட்டில் நகரமயமாதல் ------- நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பதை கீழடி அகழாய்வு கூறுகின்றது
(அ) 3-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு (ஆ) 4-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு
(இ) 5-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு **(ஈ) 6-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு**

15. அகத்தின் இருளைப் போக்கும் விளக்காக வள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?
**(அ) பொய்யா விளக்கு** (ஆ) குடும்ப விளக்கு (இ) அருள் விளக்கு (ஈ) தவ விளக்கு

16. புலாலை உணவாக்கிக் கொள்பவரை வள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார்?
(அ) முறையற்றவர் **(ஆ) அருளற்றவர்** (இ) அறிவற்றவர் (ஈ) பொருளற்றவர்

17. நெருப்பின் நடுவில் கூடப் படுத்துத் தூங்கலாம். ஆனால், எப்போது தூங்க முடியாது?
**(அ) வறுமையிலிருக்கும் போது தூங்கமுடியாது**
(ஆ) செல்வம் நிறைந்திருக்கும்போது தூங்கமுடியாது
(இ) நோயின் கடுமை மிகுந்திருந்தால் தூங்க முடியாது
(ஈ) துன்பம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் தூங்க முடியாது

18.சேரும் போது மகிழ்வதும் பிரியும் போது மனம் கலங்குவதும் யாருடைய தொழிலாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
**(அ) புலவர் தொழில்** (ஆ) உழவர் தொழில் (இ) மருத்துவர் தொழில் (ஈ) வணிகர் தொழில்

19. பின்வருவனவற்றைப் பொருத்துக:

| | |
|---|---|
| அ. சம்பரான் சத்தியாகிரகம் | 1. 1922 |
| ஆ. வகுப்புவாத விருது | 2. 1932 |
| இ. ஆகமதாபாத் ஆலைத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் | 3. 1918 |
| ஈ. பர்தோலி தீர்மானம் | 4. 1917 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **2** | **3** | **1** |
| ஆ. | 2 | 3 | 4 | 1 |
| இ. | 1 | 2 | 3 | 4 |
| ஈ. | 4 | 3 | 2 | 1 |

20. 1931 ஆம் ஆண்டு கராச்சியில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்தவர்
(அ) அபுல் கலாம் ஆசாத் **(ஆ) வல்லபாய் பட்டேல்** (இ) ஜவஹர்லால் நேரு (ஈ) சரோஜினி

21. கட்டபொம்மன் தூக்கிலிட்டு கொலை செய்வதை நிறைவேற்றியவர்
(அ) கர்னல் ஹரான் **(ஆ) மேஜர் பானர்மென்** (இ) எட்வர்ட் கிளைவ் (ஈ) ஜான் கிரடாக்

22. "தி ரேஸ் ஆஃப் மை லைஃப்" என்ற சுயசரிதை யாருடன் தொடர்புடையது?
(அ) பி.டி.உஷா **(ஆ) மில்கா சிங்** (இ) கபில்தேவ் (ஈ) மஹேந்திர சிங் தோனி

23. --------- மெட்ரோ ரயில் அமைப்பு மற்றும் சேவைகள் இந்தியாவில் 2022ஆம் ஆண்டில் செயல்படுகிறது.
(அ) 13 (ஆ) 14 **(இ) 15** (ஈ) 16

24. மக்களவை மற்றும் ஒவ்வொரு மாநில சட்டமன்றங்களிலும் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக் கூறும் இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவு யாது?
(அ) சட்டப்பிரிவு-234 (ஆ) சட்டப்பிரிவு-263 **(இ) சட்டப்பிரிவு-326** (ஈ) சட்டப்பிரிவு-363

25. யாஸ் சூறாவளி எங்கு உருவானது?
(அ) அரபிக்கடல் **(ஆ) வங்காள விரிகுடா** (இ) செங்கடல் (ஈ) சாக்கடல்

26. -------- என்பது உறுதியான, தடித்த வெண்ணிற உறையாக அமைந்து கண்ணின் உள்பாகங்களைப் பாதுகாக்கின்றது.
**(அ) ஸ்க்லெரா** (ஆ) கண்ஜங்டிவா (இ) கார்னியா (ஈ) ஐரிஸ்

27. காப்பித் தூளில் சேர்க்கப்படும் கலப்படப் பொருள் --------- ஆகும்
(அ) சாக்பீஸ் பொடி (ஆ) மணல் துகள்கள் **(இ) புளிபொடி** (ஈ) மெட்டனில் மஞ்சள்

28. இவற்றுள் எந்த விடை தவறானது:
1 மெட்ரிக்டன் என்பது ----------
1. 10 குவின்டால்
2. 1000 கிலோகிராம்
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும்
(இ) 1 மற்றும் 2 ஆகிய இரண்டும் **(ஈ) 1 மற்றும் 2 ஆகியவற்றில் எதுவுமில்லை**

29. பூமியில் ஒரு மனிதனின் நிறை 50 கி.கி. எனில் அவரின் எடை எவ்வளவு?
**(அ) 490 நியூட்டன்** (ஆ) 490 கி.கி (இ) 50 கி.கி (ஈ) 50 நியூட்டன்

30. வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை எது?
**(அ) சர்க்கரை ஆலை** (ஆ) சிமெண்ட் ஆலை
(இ) எஃகு தொழிற்சாலை (ஈ) சுரங்கம் தோண்டுதல்

31. கூற்று மற்றும் காரணம் வகை:
கூற்று (A) : ஒழுங்குப்படுத்தப்படாத துறையில் வேலைவாய்ப்பு வரையறைகள் நிலையானதாக இருக்காது.
காரணம் (R): இத்துறை சுயதொழில் புரியும் ஏராளமான, சிறு அளவில் தொழில் செய்வோரை உள்ளடக்கியது
**(அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, (A) கூற்றுக்கான காரணம் (R) சரி**
(ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரி, (A) கூற்றுக்கான காரணம் (R) தவறு
(இ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு
(ஈ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

32. வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில் வெற்றியடைந்த ஐந்தாண்டுத் திட்டங்கள்
1. முதலாம் ஐந்தாண்டுத்திட்டம்
2. மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டம்
3. ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்டம்
4. ஏழாவது ஐந்தாண்டுத்திட்டம்
(அ) அ, ஆ மற்றும் இ (ஆ) ஆ, இ மற்றும் ஈ
**(இ) அ, இ மற்றும் ஈ** (ஈ) அ, ஆ மற்றும் ஈ

33. உலகத்தில் உள்ள மொத்த ஏழை மக்களில் --------- சதவிகிதம் இந்தியாவில் உள்ளனர்.
(அ) 12 (ஆ) 18 **(இ) 22** (ஈ) 20

34. எந்த ஆண்டு அடிப்படை உரிமைகள் பட்டியலிலிருந்து சொத்துரிமை நீக்கப்பட்டது?
(அ) 1976 (ஆ) 1972 **(இ) 1978** (ஈ) 1975

35. உலகிலேயே எழுதப்பட்ட மற்றும் மிகவும் நீளமான அரசியலமைப்பு எது?
(அ) அமெரிக்கா **(ஆ) இந்தியா** (இ) இங்கிலாந்து (ஈ) ஐரிஷ்

36. கூற்று(A): இந்திய அரசியல் அமைப்பானது தேர்தல் ஆணையம் சுதந்திரமாகச் செயல்பட வழிவகை செய்கிறது.

winmeen.com

காரணம் (R): சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த உறுதி செய்கிறது
**(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது மற்றும் (R) (A)வை விளக்குகிறது**
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரியானது (R) (A) விளக்கவில்லை
(இ) (A) சரியானது மற்றும் (R) தவறானது
(ஈ) (A) தவறானது மற்றும் (R) சரியானது

37. பின்வரும் தொடர் வரிசையின் அடுத்த எண்:
4, 6, 12, 14, 28, 30, ?
(அ) 32 **(ஆ) 60** (இ) 62 (ஈ) 64

38. SQUARE என்பது 1917211185 எனக் குறிக்கப்பட்டால் RECTANGLE என்பது எவ்வாறு குறிக்கப்படும்
(அ) 1753201147125 (ஆ) 1853201114126 **(இ) 1853201147125** (ஈ) 1953201147125

39. "கடிகாரத்திற்கு" தொடர்புடைய வார்த்தை "மணி" எனில் வெப்பமானிக்கு தொடர்புடைய வார்த்தை என்ன?
(அ) வெப்பம் (ஆ) கதிர்வீச்சு (இ) ஆற்றல் **(ஈ) வெப்பநிலை**

40. ஒரு நெட்டாண்டில் 53 சனிக்கிழமைகள் கிடைப்பதற்கான நிகழ்தகவு காண்க?
(அ) 1/7 **(ஆ) 2/7** (ஈ) 3/7 (ஈ) 4/7

41. ஒரு வேலையை ஆகாஷ் 3 நாட்களில் முடிப்பார். அதே வேலையை ராதா முடிக்க 6 நாட்கள் ஆகும். இருவரும் சேர்ந்து செய்தால், அவ்வேலையை எத்தனை நாட்களில் முடிப்பர்?
(அ) 1 **(ஆ) 2** (இ) 3 (ஈ) 4

42. ஒரு செங்கல்லின் நீளம், அகலம் மற்றும் உயரம் முறையே 24 செ.மீ x 12 செ.மீ x 8 செ.மீ ஆகும். 20 மீ நீளம் 48 செ.மீ அகலம் மற்றும் 6 மீ உயரமுள்ள ஒரு சுவர் எழுப்புவதற்கு இது போன்ற எத்தனை செங்கற்கள் தேவை?
**(அ) 25, 000** (ஆ) 20, 000 (இ) 30, 000 (ஈ) 22, 500

43. ரூ.4, 000க்கு 10% ஆண்டு வட்டியில், ஆண்டுக்கு ஒருமுறை வட்டி கணக்கிடப்படும் முறையில் 2 1/2 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டுவட்டியைக் காண்க:
(அ) ரூ.1, 024 (ஆ) ரூ.1, 032 (இ) ரூ.1, 050 **(ஈ) ரூ.1, 082**

44. ரூ.35, 000க்கு வட்டி வீதம் 9% எனில், இரண்டு ஆண்டுகளுக்கான தனி வட்டியைக் காண்க:
**(அ) ரூ.6, 300** (ஆ) ரூ.6, 000 (இ) ரூ.7, 400 (ஈ) ரூ.6, 800

45. ஒரு மன்றத்தில் உள்ள மாணவர்கள் மற்றும் மாணவிகளின் விகிதம் 3 : 2 எனில் பின்வருவனவற்றுள் எது உண்மையான எண்ணிக்கையுள்ள நபர்களைக் குறிக்கின்றது?
(அ) 16 (ஆ) 18 (இ) 24 **(ஈ) 25**

46. 7 : 5 ஆனது x : 25க்கு விகித சமம் எனில் x–ன் மதிப்பு
**(அ) 35** (ஆ) 25 (இ) 175 (ஈ) 125

47. ஒரு வேலையை 4 மணி நேரத்தில் பாரி செய்கிறார். யுவன் அதே வேலையை 6 மணி நேரத்தில் செய்கிறார் எனில் இருவரும் சேர்ந்து அந்த வேலையைச் செய்து முடிக்க எத்தனை மணி நேரமாகும்?
(அ) 2 மணிகள் 20 நிமிடங்கள் (ஆ) 2 மணிகள் 40 நிமிடங்கள்
**(இ) 2 மணிகள் 24 நிமிடங்கள்** (ஈ) 2 மணிகள் 44 நிமிடங்கள்

48. 10 நாற்காலிகளின் விலை 4 மேசைகளின் விலைக்குச் சமம். 15 நாற்காலிகள் மற்றும் 2 மேசைகள் சேர்த்து விலை Rs.4, 000.
12 நாற்காலிகள் மற்றும் 3 மேசைகளின் மொத்த விலை என்ன?
(அ) ரூ.3, 500 (ஆ) ரூ.3, 750 (இ) ரூ.3, 840 **(ஈ) ரூ.3, 900**

winmeen.com

49. ---------- எழுத்துக்களில் காணப்படும் "மெலுஹா" என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்.
(அ) சித்திர எழுத்து **(ஆ) கியூனிபார்ம்** (இ) பிராமி (ஈ) ஹைரோகிளிபிக்

50. கீழ்க்கண்டவற்றில் எது அரசியல் சமத்துவம் ஆகும்.
**(அ) அரசாங்கத்திற்கு மனுசெய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது**
(ஆ) இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்
(இ)சட்டத்தின் முன் அனைவரும் சமம்
(ஈ) சட்டம் கைகளில் செல்வம் செறிவு தடுப்பு

51. பின்வரும் மசூதிகளில் வெற்றி கோபுரத்தால் மிகவும் பிரபலமான மசூதி எது?
(அ) பேகம்பூரி மசூதி **(ஆ) குவாத் உல் இஸ்லாம் மசூதி**
(இ) மோட்டி கி–மஸ்ஜித் (ஈ) ஜமாளி–கமாளி மசூதி

52. தைமூர் இந்தியா மீது படையெடுத்த ஆண்டு எது?
(அ) 1396 **(ஆ) 1398** (இ) 1414 (ஈ) 1451

53. தமிழ்நாட்டில் எந்த மாவட்டம் குறைவான பாலின விகிதம் கொண்டுள்ளது?
(அ) வேலூர் (ஆ) கடலூர் (இ) நீலகிரி **(ஈ) தர்மபுரி**

54. இந்தியாவின் முதல் புறநகர் இரயில் போக்குவரத்து எங்குத் தொடங்கப்பட்டது?
(அ) கொல்கத்தா (ஆ) சென்னை (இ) டெல்லி **(ஈ) மும்பை**

55. இந்தியாவின் மிகப் பழமையான மடிப்பு மலைத்தொடர் எது?
(அ) சாஸ்கர் மலைத்தொடர் (ஆ) காரகோரம் மலைத்தொடர்
**(இ) ஆரவல்லி மலைத்தொடர்** (ஈ) லடாக் மலைத்தொடர்

56. தமிழ்நாட்டில் கீழ்க்காணும் எந்த இடத்தில் அணுமின் உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது?
(அ) நரோரன் **(ஆ) கூடங்குளம்** (இ) தாராபூர் (ஈ) நரோரா

57. மக்களைத் தேடி மருத்துவம் முதலில் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது?
(அ) தர்மபுரி (ஆ) மதுரை **(இ) கிருஷ்ணகிரி** (ஈ) தேனி

58. நிதி ஆயோக் (2018) அறிக்கையின் படி சுகாதாரக் குறியீட்டில் தமிழ்நாடு ---------- இடத்தை வகிக்கிறது.
(அ) முதல் (ஆ) எட்டாம் (இ) ஐந்தாம் **(ஈ) மூன்றாம்**

59. எந்த மாநிலம் முதன் முதலில் "பஞ்சாயத்து ராஜ்" முறையை செயல்படுத்தியது?
**(அ) இராஜஸ்தான்** (ஆ) பீஹார் (இ) கேரளம் (ஈ) தமிழ்நாடு

60. தமிழகத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தின் போது உப்புச் சட்டங்களை மீறிதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி யார்?
**(அ) ருக்மணி லட்சுமிபதி** (ஆ) முத்துலட்சுமி அம்மையார்
(இ) மூவலூர் இராமாமிர்தம் (ஈ) அன்னிபெசன்ட்

61. பூலித்தேவரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத கோட்டை ----------- ஆகும்.
(அ) நெற்கட்டும்செவல் (ஆ) வாசுதேவநல்லூர் (இ) பனையூர் **(ஈ) சிவகிரி**

62. ஒரிசா நாட்டோடு தொடர்புடைய புலவர் யார்?
(அ) கம்பர் (ஆ) சேக்கிழார் **(இ) ஒட்டக்கூத்தர்** (ஈ) செயங்கொண்டார்

63. யாருடைய பகையைத் தவிர்க்க வேண்டும்?
(அ) வில்லேர் உழவர் பகை **(ஆ) சொல்லேர் உழவர் பகை**

(இ) அன்பேர் உழவர் பகை (ஈ) பண்பேர் உழவர் பகை

64. எப்படிப்பட்ட அரசனின் கீழ் மக்கள. தங்கி வாழ்வார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?
(அ) மென்சொல் விரும்புவர் **(ஆ) கடுஞ்சொல் பொறுப்பவர்**
(இ) கடுஞ்சொல் பொறுக்காதவர் (ஈ) பகைமையை வெல்பவர்

65. "அழுக்காறுடையான் கண் ஆக்கம்போன் றில்லை" – இதில் அழுக்காறு என்பதன் பொருள் யாது?
(அ) சினம் (ஆ) வெகுளாமை **(இ) பொறாமை** (ஈ) தீமை

66. காலத்தினால் செய்த நன்றியை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?
(அ) அறிவைவிடப் பெரியது (ஆ) கடலைவிடப் பெரியது
**(இ) உலகத்தைவிடப் பெரியது** (ஈ) வானைவிடப் பெரியது

67. அறத்திற்கு மட்டுமன்று, மறத்திற்கும் துணை என்றுத் திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?
(அ) பொறுமை **(ஆ) அன்பு** (இ) பெருமை (ஈ) கல்வி

68. மூவலூர் இராமாமிர்தம் --------- மாவட்டத்தில் பிறந்தார்
(அ) கடலூர் **(ஆ) மயிலாடுதுறை** (இ) தஞ்சாவூர் (ஈ) கன்னியாகுமரி

69. ஈ.வே.ராவிற்கு -----------ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் "பெரியார்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.
(அ) 1936 (ஆ) 1937 **(இ) 1938** (ஈ) 1939

70. "நவஜவான் பாரத் சபா" என்ற அமைப்பை நிறுவியவர் -------- ஆவார்
**(அ) பகத்சிங்** (ஆ) சுபாஷ் சந்திர போஸ் (இ) வீர் சாவர்க்கர் (ஈ) சந்திர சேகர ஆசாத்

71. பின்வருவனவற்றுள் இந்தியாவின் இரண்டாவது பெரிய துறைமுகம் எது?
(அ) மும்பை (ஆ) மங்களூர் **(இ) சென்னை** (ஈ) கொச்சி

72. கலைத்துறையில் சாதனைகள் செய்தமைக்காக, 2021–ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாட்டில் பத்ம விபூஷன் விருது பெற்றவர் யார்?
(அ) நாராயண் தேவ்நாத் (ஆ) கே.எஸ்.சித்ரா
(இ) பாம்பே ஜெயஸ்ரீ **(ஈ) எஸ்.பி.பாலசுப்பிரமணியம்**

73. 2020–21 ஆண்டிற்கான இந்தியாவின் நாள் ஒன்றுக்கான தனி மனித பால் இருப்பு ---------- ஆகும்.
(அ) 319 கிராம்/நாள் (ஆ) 406 கிராம்/நாள் **(இ) 427 கிராம்/நாள்** (ஈ) 467 கிராம்/நாள்

74. 26 ஜனவரி 2021–ல் மகாவீர் சக்ரா விருது ---------- அவர்களுக்கு வழங்கப்பட்டது
(அ) நாயக் திகேந்திர குமார் (ஆ) மேஜர் விவேக் குப்தா
(இ) பிரேகிடியர் சாண்ட் சிங் **(ஈ) கர்னல் B.சந்தோஷ் பாபு**

75. முள்ளெலும்பு மற்றும் குடல்வால் எதற்கு எடுத்துக்காட்டாகும்?
(அ) இரண்டாம் நிலை உறுப்புகள் (ஆ) செயல் ஒத்த உறுப்புகள்
(இ) அமைப்பு ஒத்த உறுப்புகள் **(ஈ) எச்ச உறுப்புகள்**

76. தவறாகப் பொருத்தப்பட்டுள்ள குறைபாடு நோயினை கண்டறிக:
(அ) வைட்டமின் $B_3$ பெலாக்ரா (ஆ) வைட்டமின் $B_6$ – டெர்மாடிட்ஸ்
**(இ) வைட்டமின் $B_2$ – பெரிபெரி** (ஈ) வைட்டமின் $B_{12}$ – உயிரைப்போக்கும் இரத்த சோகை

77. வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததால் இதனைக் "கருப்பு தங்கம்" என அழைக்கின்றனர்
**(அ) பெட்ரோலியம்** (ஆ) கல்கரி (இ) கரித்தார் (ஈ) அம்மோனியா

78. எந்த தனிமத்தை மற்ற தனிமங்களுடன் சேர்த்து வயிற்றுப்போக்கு சிகிச்சைக்கு மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்?
**(அ) பிஸ்மத்** (ஆ) துத்தநாகம் (இ) கால்சியம் (ஈ) தங்கம்

79. புவியின் இயற்கையான துணைக்கோள்
(அ) அண்டிரோமீடா **(ஆ) நிலவு** (இ) ஸ்புட்னிக் (ஈ) பால்வெளி வீதி

80. பாரத ரிசர்வ் வங்கியின் முதல் ஆளுநர் யார்?
**(அ) ஓஸ்போர்ன் ஸ்மித்** (ஆ) N.K.சிங் (இ) A.K.சந்தா (ஈ) C.ரங்கராஜன்

81. தனிநபர் வருமானத்தின் மீது விதிக்கப்படும் வரி
(அ) மறைமுக வரி (ஆ) சொத்து வரி **(இ) நேர்முக வரி** (ஈ) தேய்வுவீத வரி

82. மைய வங்கி அல்லது ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா பற்றி பின்வரும் வாக்கியங்களில் எவை சரியானவை?
1. காகிதப் பணத்தை வெளியிடுதல்
2. தொழிற்சாலை உரிமம் வழங்குதல்.
3. அரசுக்கு வங்கியாகச் செயல்படுதல்.
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 2 மட்டும் **(இ) 1 மற்றும் 3 மட்டும்** (ஈ) 2 மற்றும் 3 மட்டும்

83. இந்தியாவின் கூட்டாட்சி முறையை கூட்டுறவுக் கூட்டாட்சி எனக் கூறியவர் யார்?
**(அ) கிரன்வில் ஆஸ்டின்** (ஆ) டாக்டர் அம்பேத்கர் (இ) ஜவஹர்லால் நேரு (ஈ) வியர்

84. நதி நீர் ஆணையச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு
**(அ) 1956** (ஆ) 1954 (இ) 1952 (ஈ) 1950

85. உலக மனித உரிமைகள் தினமாக கொண்டாடப்படும் நாள் எது?
(அ) டிசம்பர் 9 **(ஆ) டிசம்பர் 10** (இ) டிசம்பர் 11 (ஈ) டிசம்பர் 12

86. எந்த ஆண்டு தமிழ்நாடு சட்ட மேலவை நீக்கப்பட்டது?
(அ) 1985 **(ஆ) 1986** (இ) 1987 (ஈ) 1988

87. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் அதன் பிற நீதிபதிகளை நியமனம் செய்கின்றவர்
**(அ) இந்தியக் குடியரசு தலைவர்** (ஆ) இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்
(இ) ஆளுநர் (ஈ) இந்தியப் பிரதமர்

88. தொடர்வரிசையின் அடுத்த உறுப்பு
2 , 5, 9, 19, 37, ----
(அ) 74 **(ஆ) 75** (இ) 76 (ஈ)82

189. STILL என்ற வார்த்தையின் கண்ணாடி பிம்பம்
(A) 
(B) 
(C) 
(D) 
Answer: (C)

90. BAY = 28 எனில் WON = ?
(அ) 46 **(ஆ) 52** (இ) 67 (ஈ) 89

winmeen.com

91. ஒருவர் தான் பெற்ற ரூ.65, 000 கடனை திருப்பிச் செலுத்த முதல் மாதம் ரூ.400 செலுத்துகிறார். அதன் பிறகு ஒவ்வொரு மாதமும் முந்தைய மாதம் செலுத்தியதைவிட ரூ.300 கூடுதலாகச் செலுத்துகிறார். அவர் இந்தக் கடனை அடைக்க எவ்வளவு காலம் தேவைப்படும்?

(அ) 10 மாதங்கள் (ஆ) 15 மாதங்கள் (இ) 25 மாதங்கள் **(ஈ) 20 மாதங்கள்**

92. 2 மீ ஆழம் மற்றும் 45 மீ அகலமுள்ள ஒரு ஆற்றிலிருந்து நீரானது 3 km/hr வேகத்தில் கடலில் கலக்கிறது எனில் ஒரு நிமிடத்தில் கடலில் கலக்கும் நீரின் அளவு

(அ) 3000 மீ$^3$ (ஆ) 3500 மீ$^3$ **(இ) 4500 மீ$^3$** (ஈ) 27000 மீ$^3$

93. 10 ஆண்டு வட்டியில், ஆண்டுக்கு ஒரு முறை வட்டி கணக்கிடப்பட்டால், 3 ஆண்டுகளில் எந்த அசலானது ரூ.2, 662 தொகையாகும்

(அ) ரூ.1, 500 (ஆ) ரூ.1, 800 **(இ) ரூ.2, 000** (ஈ) ரூ.2, 500

94. தனி வட்டியில் அசலானது n ஆண்டுகளில் இரட்டிப்பாகும் எனில், அது எத்தனை ஆண்டுகளில் m மடங்கு ஆகும்?

(அ) m (ஆ) mn **(இ) (m–1) x n** (ஈ) mn–1

95. 15 அட்டைகளின் மொத்த எடை 50 கிராம் எனில், அதே அளவுடைய 2 1/2 கி.கி எடையில் உள்ள அட்டைகளின் எண்ணிக்கை

**(அ) 750** (ஆ) 700 (இ) 680 (ஈ) 720

96. 48 வினாடிகள், 72 வினாடிகள் மற்றும் 108 வினாடிகளுக்குப் பிறகு மூன்று வெவ்வேறு சாலை குறுக்கு வெட்டுகளில் போக்குவரத்து விளக்குகள் மாறுகின்றன. காலை 7 மணிக்கு அவை ஒரே நேரத்தில் மாறினால், எந்த நேரத்தில் அவை மீண்டும் ஒரே நேரத்தில்மாறும்

(அ) 07 : 12 (ஆ) 12 : 07 (இ) 07 : 12 : 07 **(ஈ) 07 : 07 : 12**

97. 'A' என்பவர் தனியே ஒரு வேலையை 35 நாட்களில் முடிப்பார். 'B' ஆனவர், 'A'–ஐ விட 40% கூடுதல் திறன் வாய்ந்தவர் எனில், 'B' ஆனவர் அந்த வேலையை எத்தனை நாட்களில் முடிப்பார்?

(அ) 15 நாட்கள் **(ஆ) 25 நாட்கள்** (இ) 35 நாட்கள் (ஈ) 45 நாட்கள்

98. (P+Q) வின் 20% மற்றும் (P–Q) வின் 50% சமம் எனில் P : Q காண்க:

(அ) 2 : 5 (ஆ) 3 : 7 **(இ) 7 : 3** (ஈ) 5 : 2

99. 450 மற்றும் 216 ஆகியவற்றின் மீப்பெரு பொது வகுத்தியை 23x – 51, என்ற வடிவில் எழுதினால் x–ன் மதிப்பு யாது?

(அ) 2 **(ஆ) 3** (இ) 4 (ஈ) 5

100. ஒரு வீட்டில் நான்கு அலைபேசிகள் உள்ளன. காலை 5 மணிக்கு எல்லா அலைபேசிகளும் ஒன்றாக ஒலிக்கும். அதன் பின் முதல் அலைபேசியானது ஒவ்வொரு 15 நிமிடங்களிலும் இரண்டாவது அலைபேசியானது ஒவ்வொரு 20 நிமிடங்களிலும் மூன்றாவது அலைபேசியானது ஒவ்வொரு 25 நிமிடங்களிலும் மற்றும் நான்காவது அலைபேசியானது ஒவ்வொரு 30 நிமிடங்களிலும் ஒலிக்கின்றன எனில் அவை மீண்டும் எப்போது ஒன்றாக ஒலிக்கும்?

(அ) 7 மணி (ஆ) 1 மணி (இ) 8 மணி **(ஈ) 10 மணி**